සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

# இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(II)

| | | |
|---|---|---|
| காலம் 03 மணித்தியாலங்கள் | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்)- 15 | විභාග අංකය Index No / சுட்டெண் ………………………… |

- ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

1. இலங்கையின் அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் பொதுமக்களை மையப்படுத்திய அரசாங்க கொள்கைகளை அடையாளம்கண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் தாங்கள் முன்மொழியும் அரசாங்க சேவை மறுசீரமைப்புக்கள் தொடர்பில் விபரிக்க. (20 புள்ளிகள்)

2. தேசியப் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு அரச தொழில்முயற்சிகளினால் நிறைவேற்றப்படும் மற்றும் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் உதாரணங்களுடன் கலந்துரையாடுக. (இங்கு உட்கட்டமைப்பு வசதிகள், சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகளை உள்ளடக்கி ஆகக் குறைந்தது நான்கு உதாரணங்களுடன் விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது.) (20 புள்ளிகள்)

3. இலங்கையின் பிரதேச அபிவிருத்திக்காக அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருதத்தின் மூலம் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டதனால் ஏற்பட்ட தாக்கம் மற்றும் முகம்கொடுக்க நேரிட்டுள்ள பிரச்சினைகள் என்பவற்றை விமர்சன ரீதியில் ஆராய்க. (20 புள்ளிகள்)

4. i. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் போது இலங்கை முகம்கொடுக்கும் சவால்களை விளக்குக. (08 புள்ளிகள்)

   ii. இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியில் அரசாங்க மற்றும் தனியார் பங்குடமை (Public Private Partnership) பிரதான முதலீட்டுப் போக்காக வளர்ந்துவருகின்றது. அதன் மூலம் அடைந்துகொள்ள முடியுமான நன்மைகளை உதாரணங்களுடன் பகுப்பாய்வு செய்க. (12 புள்ளிகள்)

5. பின்வரும் தலைப்புக்களில் இரண்டை விளக்குக.

i. அபிவிருத்தி நிர்வாகத்தின் அடிப்படைகள் (Elements)

ii. இலங்கையை அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நகர்த்தும் போது காணப்பட வேண்டிய அரசியல் ஸ்தீரத்தன்மையின் முக்கியத்துவம்

iii. இலங்கைப் போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றின் அபிவிருத்திக்கு நிர்வாகத்துறையின் கடமைப்பொறுப்புகள் (புள்ளிகள் 10x2 = 20)

6. அரசாங்கத் துறையின் முகாமையாளர் ஒருவர் என்ற ரீதியில் தங்களது கண்ணோட்டத்தில் இலங்கையின் அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகள் நல்லாட்சிக் கோட்பாடுகளுக்கு அமைவாக உள்ளனவா என்பதை விமர்சன ரீதியில் விவரிக்க. (20 புள்ளிகள்)

7. தொழில்முயற்சி ஒரு நாட்டினது பொருளாதாரத்தை தாங்கி நிற்கும் ஒரு தூணாகும். நாட்டினுள் தொழிற்முயற்சிகளுக்கு உகந்த சூழலை (Conductive Environment) உருவாக்கும் போது அபிவிருத்தி நிருவாகி ஒருவரது வகிபாகத்தை இலங்கை மீது கவனம் செலுத்தி விபரிக்க. (20 புள்ளிகள்)

************